உ

திருச்சிற்றம்பலம்

சுப்பிரமணியர் துணை.

கடிகைமுத்துப்புலவர் இயற்றிய

# திருவிடைமருதூரந்தாதி.

இஃது,

விருத்தாஜலம்,

## தியாகராஜகவிராஜர்

பாடபேதங்களைத்திருத்தி

யளித்தருள

திருநெல்வேலிப்,

பரிமளகாரவீதியிலிருக்கும்

ம-ா-ா-ஸ்ரீ,

ம·மேத்தர் முகீதீன் அவர்கள்

முயற்சியால்


க·ஆதிநாராயணசெட்டியார்

அவர்களது.

ஆதிவித்யாவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

உருத்திரோற்காரி வூ—ஆடிமீ 1863


இந்தப்புத்தகம்-ரிஜிஷ்டர் செய்யப்பட் டிருக்கின்றது.

திருச்சிற்றம்பலம்.

# சாத்துகவி.

## விருத்தாஜலம்

## தியாகராஜகவிராஜர் இயற்றியது,

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

சூடிகைமுற்றுநவமணிகளிலகுமெழிற்பன்னகமுஞ் ... *
சொலற்கொண்ணுதாம் ... ... ... *
அடிகைமுத்துநகையரவிந்தம்புறவினணையெனப்பொன் ... *
அஜலந்தந்த ... ... ... ... ... *
துடிகைமுற்றுமென்மருங்குன்மங்கைபங்கன்மருதப்பன் *
றுணைத்தாளிற்குக் ... ... ... ... *
கடிகைமுத்துப்புலவனருண்மருதூரந்தாதிநலங் ... *
கருதுங்காலே ... ... ... ... *

இதுவுமது.

கமகனருங்கவிவாதிவாக்கியெனும்புலமையராங் ... *
ககனமீனுக்... ... ... ... ... *
கிமகிரணனிவனேயென்றியம்பவல்லோர்யாவர்களும்... ... *
இறைஞ்சியேத்த ... ... ... ... *
சுமுகமதின்மறமணக்குந்திராயெழுமெனச்சொலுஞ்சீர் ... *
துன்னவீசன் ... ... ... ... *
யமகமிசைத்திடுமிறைவன்கடிகைமுத்துப்புலவனைப்போல் *
யாருண்டாமால்... ... ... *

## விளம்பரம்.

இந்தபுத்தகம்சென்னபட்டணம் குச்சிலிக் கடைக்குஅடுத்த பிரம்புகடை ஒத்தவாடை யிருசப்பமேஸ்திரி தெருவில் சயிஙு-நெம்பர் வீட்டில் யிருக்கின்றது தேவையானவர்கள் வாங்கிக்கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்.

சுப்பிரமணியர் துணை.

# திருவிடைமருதூரந்தாதி.

காப்பு.

## விநாயகர் துதி.

கலித்துறை

நிரையசை.

ஒருகொம்பிருபதமும்மதநால்வாயோரைந்துகரம் ... ...*
பெருகுஞ்செவிசிறுகுங்கண்புகர்முகம்பெற்றதந்தி ... *
முருகன்றமையனுமைமைந்தனைந்துமுகன்மகன்மான் ...*
மருகன்றுணைநம்மருதூரந்தாதிவருவிக்கவே. ... ... *

## கடவுள்வணக்கம்.

திருப்பங்கயத்தனமாதுக்களித்தவன்செந்துவர்வாய்த்
திருப்பங்கயத்தன்புகூர்மருதூரன்பிறையெழுந்த
திருப்பங்கயத்தனவாகத்தனன்முகத்தெம்முன்மழுத்
திருப்பங்கயத்தனிருப்பனென்னெஞ்சிற்றிருக்கறவே. (௧)

பாங்கன்றலைவனைவியந்துரைத்தல்.

திருக்கண்டநம்புமடியர்க்கொட்டாதசிவன்கரிய
திருக்கண்டநந்தமருதூரன்வெற்பிற்பிறையெழுந்த
திருக்கண்டநந்தினுநந்தாதவமுஞ்சிதைக்குமிந்தத்
திருக்கண்டநண்பனங்கேவந்ததாலறத்தீர்ந்தவனே. (௨)

தவனனிலங்கமலமலராம்பன்சந்திரன்மா
தவனனிலங்கமலமொருக்கால்வெம்மைதண்மைகுனரு
தவனனிலங்கமலனவையாவனசாரவொன்று
தவனனிலங்கமலன்மருதூரன்சரணமக்கே. (௩)

நமனத்தியானநஞ்சென்னக்கொதித்தெம்மைநாடிடுமுந்
நமனத்தியானநின்பாற்செல்லநல்குமென்னுன்குகையா

நமனத்தியானனனத்தபத்தர்க்கென்றுநல்லவனே
நமனத்தியானஞ்செய்வார்மருதூருறைநாயகனே. (௪)

அகனகத்தானத்தடிவீழ்ந்தலறவடியொன்றினு
யகனகத்தாலத்தநாலைக்கிருனையடர்த்தவன்றா
யகனகத்தான்மதில்சூழ்மருதூரையடைபவரோ
அகனகத்தாகினைத்தைவினைத்துன்பமறுப்பவரோ. (௫)

அறுகாலனஞ்செறிவார்மருதூரரையாழியின்பால்
அறுகாலனஞ்சமர்கண்டரைத்தொண்டரையாள்பவரை
அறுகாலனஞ்சொரிவேழ்வியினுல்வணங்கன்பர்க்கருள்
அறுகாலனஞ்சவருகாலமுமோரலைவிலையே. (௬)

தலைவி இரவினீட்ட முரைத்தல்.

அலையம்புயங்கமணிமுடியார்கொன்றையந்தொடையல்
அலையம்புயன்மருதூர்வைகைநாட்டினிலாலைவிற்பை
யலையம்புயங்குவினைபோய்த்துயரமகல்கைக்குவந்
தலையம்புயமலர்ப்போன்றுலைப்பானென்றரிவையரோ. (௭)

அரியரவிந்தன்புகழ்மருதூருறையையன்றுய்ய
அரியரவிந்தம்புனைவோன்சிலம்பிலதர்மனிதர்
அரியரவிந்தமதமாவினையமறக்குலத்துக்
கரியரவிந்தமுயலூன்றின்றேகுமவதரித்தே. (௮)

உளர்போமெனக்கருத்து துறை விருந்துவிலக்கல்.

அவதரிக்கும்புகழ்மாமருதூரனென்னைம்புலனும்
அவதரிக்கும்பகைசெற்றுளரன்வெற்பிலாரழலா
அவதரிக்கும்பசுந்தேனுந்தருஞ்சோலமுதொழுகி
அவதரிக்கும்பொறுக்கப்படைத்தான்கமலாலையனே. (௯)

ஆலைபனங்கனெய்யாமநெஞ்சேநம்மைபன்பர்சிந்தை
ஆலையனங்கமங்கத்தணிவோன்றரைமளி
ஆலையனங்கம்வருந்திபுந்தோடற்கரியவன்கை
ஆலையனங்கங்கொண்டோன்மருதூரனடிவணங்கே. (௰)

வணங்கரியார்தமக்கன்பற்றவரன்றுவ்ன்றெண்டர்க்கா
வணங்கரியார்முன்புகாட்டவல்லார்கையும்வாயுஞ்செய்ய

வணங்கரியாரயன்காண்பரியார்மருதூராங்கை
வணங்கரியார்தந்தையாரெந்தையாரெம்மனத்தவரே. (௰௧)

மனமாறுகைக்செம்மைவந்தாளுநாதர்வரம்பெறவா
மனமாறுகைக்குந்திருவாயிற்கோபுரயாமருதூர்
மனமாறுகைக்கொண்டடிக்கநின்றேன்கொன்றைமாமலர்த்தார்
மனமாறுகைக்குஞ்சடையாரெனவினைமாறுமன்றே. (௰௨)

தலைவன்பாங்கனுக்கு விம்மிதமுறக்கூறல்.

மாறாமதிக்கமறலியைச்செற்றவன்வஞ்சமென்று
மாறாமதிக்கபடர்க்கொளிப்பானரன்வண்ணவளை
மாறாமதிக்கமறுகூடுசென்றவன்மாமருதூர்
மாறாமதிக்கநந்தேர்முந்துமாகில்வலவனன்றே. (௰௩)

துறை-பிரிவாற்றாநாயகிகூறல்.

வலவம்படமழுவேந்தியவேந்தவரித்தசித்ர
வலவம்படவளருந்தனபாரமலைமகள்கா
வலவம்படர்பொழில்சூழ்மருதூரமதன்விரக
வலவம்படவரும்போதென்னையாளவரவலையே. (௰௪)

வலையலைவார்முலைபூங்குழலாய்க்கொண்டமங்கபங்க
வலையலைவார்விடவல்லவனேமருதூரவெங்க
வலையலைவார்மனநின்பாற்புரிந்தனமாயஞ்செய்ய
வலையலைவாரய்யனேசெய்யபாதமலர்தரவே. (௰௫)

மலரம்பையாரஞ்சொரியாலைவிற்கொண்டுமாரனெய்யா
மலரம்பையாரஞ்சும்வஞ்சிக்கருள்கிலர்மாலையைய்ய
மலரம்பையாரஞ்செறியாகர்பாத்தர்க்குவாய்த்தவெற்றி
மலரம்பையாரஞ்சடையார்மருதவனத்தவரே. (௰௬)

வனத்தவனம்பன்மலர்க்கஞ்சத்தார்மருதூரன்செய்ய
வனத்தவனம்பனிருகரத்தானத்தன்மாயமெய்வேம்
வனத்தவனம்பனகப்பணியான்சதுமாமறைய
வனத்தவனம்பனெனச்சொல்லப்போமும்மலங்களுமே. (௰௭)

தலைவனுக்குப்பாங்கிகூறல்.

மலங்குவளைக்குநடுவேதுயிலும்வயலிற்செங்க
மலங்குவளைக்குண்மலர்மருதூரநின்மாலையெழு

மலங்குவளைக்குங்கடலோசைகேட்டுவருந்திநெஞ்ச
மலங்குவளைக்குங்குமப்புயத்தாண்முக்கண்மைக்கண்டனே. (௧௮)

பாங்கிகூறல்.

கண்டங்களிக்கும்படிநஞ்சமுதுண்டகாரணவ
கண்டங்களிக்குமுழுதுங்கண்டாய்நின்றகாமருதூர்க்
கண்டங்களிக்குமகிழடியார்க்கவர்காதலன்பு
கண்டங்களிக்குங்கருணைதந்தென்றெனைக்காப்பதுவே. (௧௯)

காப்பரவப்பணியாக்கொள்வர்மாக்கமலாலயங்கொள்
காப்பரவப்பணிநீக்கித்தேனைக்கவர்மருதூர்க்
காப்பரவப்பணியாநிற்கும்வஞ்சகக்கன்னெஞ்சுரு
காப்பரவப்பணியென்னையுமாள்வர்கனற்கண்ணரே. (௨௰)

கனகத்தமரவென்சென்னியின்வண்டின்கணங்கள்செங்கோ
கனகத்தமரும்புனன்மருதூரன்கரியகண்டன்
கனகத்தமருகக்கையானரக்கனைக்காதியதுங்
கனகத்தமாவிந்தப்பதம்வைப்பதெக்காலத்திலே. (௨௧)

காலம்பரம்பயங்காசினியங்கிகலங்குமந்தக்
காலம்பரம்பயங்காய்ந்தென்னையாள்கைக்குக்கட்கழுநீர்
காலம்பரம்பயங்காட்டுக்குப்பாயக்கருதிமள்ளர்
காலம்பரம்பயங்கூர்மருதூரமுக்கட்பரனே. (௨௨)

பரமாகவந்தமறப்பூதஞ்சூழ்படையாயதளம்
பரமாகவந்தமதிச்சடையாவையம்பாவகன்ம
பரமாகவந்தமருத்தருவாய்வினைப்பற்றறநின்
பரமாகவந்தவெனைமருதூரகண்பார்த்தருளே. (௨௩)

அருளத்தனைநம்பிறப்பேழுநீக்கியடிக்கமலம்
அருளத்தனைநமக்கண்ணியனுக்குவனுட்பட்டதொண்
டருளத்தனைமருதூரனையன்பரவத்தையில்வந்
தருளத்தனைமனமேயொழியாமனம்மையனென்றே. (௨௪)

விற்பூட்டுநற்றாயிரங்கல்.

ஐயம்பலருந்தரச்சென்றிரந்தவனுதவனார்
ஐயம்பலரும்பொடிபடச்செற்றவரன்மருதூர்

ஐயம்பலருஞ்சடையானருளிலையாலனங்கன்
ஐயம்பலருங்கனஞ்சேர்குழலிக்கரும்பகையே (உரு)

### தோழிகூறல்.

அரும்பரவைக்கடுக்கண்டர்வன்றொண்டனையாள்கயிலை
அரும்பரவைக்குறவாக்குந் திருவருளார்மருதூ
ரரும்பரவைக்கனித்தொண்டனைவைப்பவரன்றுநஞ்சம்
அரும்பரவைக்கஞ்சன்வஞ்சமன்றட்டவர்க்கப்புறமே. (உசு)

### நற்றாயிரங்கல்.

அப்புக்கரக்குஞ்சடைமருதூரரொன்னுனைமண்மேல்
அப்புக்கரக்குமணியணிவோர்வெற்பினண்ணலெய்த
அப்புக்கரக்குஞ்சரங்கண்டிவ்வாறிங்கதரத்தின
யப்புக்கரக்குங்கறுக்குங்கொடிநின்றதாவிகொண்டே. (உஎ)

### பின்சென்றசெவிலிஇரங்கல்.

ஆவிக்கனங்களங்கார்வண்டணிதந்தருண்மருதூ
ராவிக்கனங்களந்தொண்டர்க்கடாமற்சென்றுண்டருளி
யாவிக்கனங்களங்காட்டமெய்வேர்க்குமவத்தையில்வந்
தாவிக்கனங்களருத்துமுன்பாண்டருளஞ்சலென்றே. (உஅ)

அஞ்சக்கரத்தைநினைவார்க்குநாச்செவியங்கமென்றுண்
டஞ்சக்கரத்தையணிவேற்கணார்வசமாகவொட்டார்
அஞ்சக்கரத்தையரிக்களித்தார்மருதூரரங்கி
அஞ்சக்கரத்தையறுத்தாரொன்பார்க்கில்லையச்சங்களே. (உகூ)

அச்சங்கரிக்குறயான்றுயர்நீங்கவோரண்ணலெய்த
அச்சங்கரிக்குமரிதுகண்டீர்மதனங்கமெரி
அச்சங்கரிக்குமரனுழவோர்பறியான்முத்தமீன்
யச்சங்கரிக்கும்வயன்மருதூரனணிவனாக்கே. (௩௰)

### துறை-மணம்விலக்கு.

வளையரம்பாய்கதிர்வைவேன்முருகர்வழுவைமுக
வளையரம்பாய்சிலைகஞ்சப்புனன்மருதூரவெள்ளி
வளையரம்பாய்சடையாரிசையேழும்வரவழைத்த
வளையரம்பாய்வரக்கண்டோர்மலரடிவந்திப்பனே. (௩௧)

வந்தியங்காமலைகுட்டங்களைபித்தம்வாதமென்மேல்
வந்தியங்காமலையானனநாதனைவான்றனைச்செவ்
வந்தியங்காமலைமாமருதூரனைவாழ்த்துநெஞ்சே
வந்தியங்காமலைசூடும்பிரானைவரதனையே. (௧௨)

வரம்பலவாயன்பர்க்கீவாய்க்ககனம்வருங்கதிர
வரம்பலவாய்விட்டகலச்செற்றோன்றவமாதர்கற்பின்
வரம்பலவாய்விடவேடங்கொண்டாய்மருதூரபொன்னி
வரம்பலவாயமதண்டத்தென்மேலன்புவைத்தருளே. (௧௩)

வையம்பரவமருதூருறையும்வரதர்செந்த
வையம்பரவமதித்தாற்கரியவர்வாய்த்தவது
வையம்பரவமகட்சூட்டுவோர்கழல்வாழ்த்தியன்பு
வையம்பரவமுடியார்நெஞ்சேநல்வரந்தரவே. (௧௪)

தரவாகமஞ்சென்னமெய்க்கூற்றென்மேல்வருதண்டத்திலா
தரவாகமங்கைபங்கோடும்விளங்கத்தலங்கணு
தரவாகமங்கணின்றேத்துஞ்செந்தாமரைத்தாளெனக்குத்
தரவாசமந்துலைமாமருதூருறைசங்கரனே. (௧௫)

சங்காரங்கைத்தலநானமுன்றேடருந்தற்பரன்பொற்
சங்காரங்கைக்கிளையாநீக்கியென்றன்றவக்கிளியச்
சங்காரலைக்கண்டடைந்தானவண்முனந்தாமதனைச்
சங்காரங்கண்டருள்வான்மருதூரன்றருக்குறவே. (௧௬)

தருக்குறைவாயளகைக்கதிபாவெனச்சாற்றிப்பொய்ம்மா
தருக்கிறைவாய்ந்திடுஞ்சூடகமும்பொற்சதங்கைகளுந்
தருக்கிறைவாஞ்சைகொண்டேயலையாமற்சரணெனப்பத்
தருக்கிறைவாழ்வருளுமருதூரனைச்சாருமின்றே. ௧௭)

சாரக்கரும்பைக்குரும்பையைச்சொற்கொங்கைதானெனவே
சாரக்கரும்பையொப்பாகுங்கடிதடத்தாற்கொத்துண்டா
சாரக்கரும்பைநிகர்புன்னகைவாய்ச்சலம்புசித்தாய்ச்
சாரக்கரும்பையொளிர்மருதூரொளிதாங்கதியே. ௧௮)

கதியளிப்பாண்டொண்டர்நாவாரவாழ்த்திக்கரங்குவிப்பக்
கதியளிப்பான்முரலுமருதூர்ப்பரன்கானங்கொண்ம

கதியளிப்பாலருந்தேனெனவேயிசைக்குங்கவின்மா
கதியளிப்பாரில்ப்பொன்னிலவாழ்வுறக்கண்டவனே (௩௯)

கண்டாரணியும்புகழ்மருதூர்வளர்கத்தன்செவ்வாய்க்
கண்டாரணியுங்கருங்கூந்தலுந்தங்குகன்னிபங்கன்
கண்டாரணியுங்கவரியதாய்க்கொளுங்காதன்மிரு
கண்டாரணிமகற்காயமன்மேற்படுகாலுளனே. (௪௰)

காலனனீர்மண்வெளிமதியெல்லிடிக்காரடங்குங்
காலனனீர்மையினனட்டமாடுங்கருத்தனெதிர்
காலனனீகந்தொடராமற்காப்பவன்காவிலறு
காலனனீடத்தார்மருதூரனேகாம்பரனே. (௪௧)

அம்பரவம்புனைவேணியன்பாணியினங்கியிவை
அம்பரவம்புனைசூழ்மருதூருறையையதிசை
அம்பரவம்புனைநெற்றிக்கனல்விழியாயென்பதை
அம்பரவம்புனைகொங்கையைவீழ்ப்பதறிந்திலையே (௪௨)

நற்றாயிரங்கல்.

இலையயிலங்கையர்தந்தையர்தென்மருதூரரொன்க
இலையயிலங்கையர்வீழவுதைத்தவரொன்றஞ்சம்வே
றிலையயிலங்கையர்வேனறும்பாலொழுக்கெல்லைமெய்யாட
இலையயிலங்கையர்வாயுயிர்நீங்குமுனென்னெஞ்சமே (௪௩)

என்றலைக்குன்றிருத்தாடரவென்பருக்கெண்கயிலை
என்றலைக்குன்றினிருந்தருள்செய்யுமிறைமருதூர்
என்றலைக்குன்றினிறங்கவர்மேனிகொண்டிடழிகைக்
கென்றலைக்குன்றிவிடாதகல்வானத்தெழுவதுவே (௪௪)

இரவினீட்டம்.

எழுதாரணிபுகழ்மாமருதூருறையீசர்வெற்பில்
எழுதாரணிபுகழ்தோளண்ணலேயிந்தமுற்றமன்றல்
எழுதாரணிகுழலாட்கெங்ஙனுந்தொய்யிலேந்துகொங்கை
எழுதாரணியமடவாரிடையினிறுதிகண்டே. (௪௫)

கண்டநந்துன்பமங்கொன்றுமிராதுபைங்காரயில்வேற்
கண்டநந்துன்னெழிற்சொண்டிலங்குங்குழற்கண்சொனடை

கண்டநந்தூவெனத்துப்பினம்பாசக்கரனையினி
கண்டநஞ்செய்தனங்தென்மருதூராயன்கான்மலரோ. (௪௬)

கான்மலரைக்கைம்மலராற்றுதிப்பருட்காதலையிக்
கான்மலரக்கருணாநிதியீந்தவன்காவிலறு
கான்மலராக்கண்டுலாவுபண்கூறுங்கவின்மருதூர்
கான்மலராக்கண்டனம்புரிந்தாடியகண்ணுதலே. (௪௭)

கண்ணீர்வழியநின்றேத்துமன்பெற்கொருக்கான்வருமோ
கண்ணீர்வழிநிற்குந்தொண்டருக்கேயருள்கஞ்சனைக்
கண்ணீரருந்தலைகையிற்கொண்டோன்விண்கடந்தெழிலார்
கண்ணீரரும்பும்பொழின்மருதூர்வளர்கத்தனென்றே. (௪௮)

கத்தனைநந்தங்கருத்தனைவெற்பருட்காதலிபா
கத்தனைநந்தமர்செங்கைத்தலத்தன்கடிமலர்மோ
கத்தனைநந்துதற்கில்லாதருளெனத்தூங்கழலே
கத்தனைநந்தன்மாமருதூரினகளங்கனே. (௪௯)

களங்கந்தரமனையாய்மூலமாயைக்கருமமென்னுங்
களங்கந்தரங்கெடநீர்சொரியாநிற்பக்கண்புளகங்
களங்கந்தரவென்னையாண்டருள்வாயென்றுங்காவொழுக்குங்
களங்கந்தரமழைபோன்மருதூருறைகாவலனே. (௫௰)

காவலராவரும்பர்க்கிறையாகுவர்கங்குன்மதிட்
காவலராவருங்கோற்கள்ளராயினுங்காவலூக்குங்
காவலராவருந்துமருதூரரைக்கன்னிதன்பங்
காவலராவருந்தாரணிவாயென்றுகைதொழவே. (௫௧)

கையுடையானையதளங்கியானைகத்தம்பெறுவேங்
கையுடையானைமருதூரனைக்கருதாகள்வன்ப
கையுடையானைத்தொழுதுவில்வேடன்கடுங்கணையாக்
கையுடையானமடவாருயிர்க்கென்கணாவதுவே. (௫௨)

பாங்கிவெறுத்தல்.

கணைவானகங்குழைமெய்யடியார்க்குக்கலங்கவாக்
கணைவானகங்கொண்டரக்கும்பிரான்புரக்கள்ளவஞ்ச

களைவானகந்தைகெடத்தகனஞ்செய்கடவுள்பொய்கைக்
களைவானகந்தொடுமாமருதூரனெங்கட்கிறையே. (௫௩)

கட்டாமரையரமார்க்குவேந்தர்கமலந்துழாய்க்
கட்டாமரையர்மருதூரிறைவர்கறையரவக்
கட்டாமரையர்மனமேயிருவினைக்கட்டறனங்
கட்டாமரையவொன்றுட்கொண்டருள்கைக்குக்கற்பனையே. (௫௪)

கற்பனையத்தனையாயினுநின்புகழ்கற்பதுநான்
கற்பனையத்தனைகாணச்சரவணப்பொய்கைவந்தோன்
கற்பனையத்தனையாமருதூரிறைகாரணவ
கற்பனையத்தனைபத்தர்குற்றத்தைக்கடிபவனே. (௫௫)

கடியவம்போடிகற்கண்ணரியைக்கண்டுகலங்கிநெஞ்சங்
கடியவம்போய்நின்றழிந்தனன்காண்குற்றங்கண்டனைநீ
கடியவம்போதமுன்கண்டதுண்டோவண்டின்கால்வலையக்
கடியவம்போருகங்கான்மருதூரன்றன்கல்வரைக்கே. (௫௬)

தலைவன்பாங்கற்குரைத்தல்.

கல்லாரமாலைமென்கூந்தல்கைக்காந்தட்கௌரிபங்கர்
கல்லாரமாலைநிகழ்மருதூரர்பொய்கைக்குண்மண்ணைக்
கல்லாரமாலையங்கையாற்றொழார்சைவக்காவியங்கள்
கல்லாரமாலையன்காணாப்பதமெங்ஙன்காண்குவரோ. (௫௭)

காணாவருந்தமிழ்ப்பாடிக்கசிந்துருகிக்களித்துக்
காணாவருந்தும்பிறவியைநீக்குங்கதியெனக்குக்
காணாவருந்தனியின்பந்தரக்கடவாய்மருதூர்க்
காணாவருந்துங்கடுக்கண்டனேயெனிற்காரியமே. (௫௮)

கார்வண்ணனைக்கமலாதனமேவுங்கடவுளையக்
கார்வண்ணனைக்கற்பகத்தரசைப்பொருளாயுளஞ்சொக்
கார்வண்ணனைந்தானன்மழுமான்சரன்கத்தன்வயற்
கார்வண்ணனையவிண்ணோர்மருதூரென்பார்கைத்தண்டமே. (௫௯)

தண்டலைநாகங்கள்பூகங்கள்சூழுந்தடஞ்சுனையில்
தண்டலைநாகங்களைகமுநீர்முகைசற்றுவிண்ட
தண்டலைநாகங்கொலென்றஞ்சிமாறெனத்தன்னிழன்மேல்
தண்டலைநாகந்தவிர்மருதூரனென்றுபரனே. (௬௰)

(தாபரசங்கமோராறுக்கும்போற்றுஞ்சதுமறைக்குந்
தாபரசங்கவயன்மருதூர்நகர்தங்கியநா
தாபரசங்கமர்சாடக்கொண்டாய்சுந்தரர்க்குச்செறா
தாபரசங்கரவல்வினையேற்குன்சரணங்களே. (௬௧)

சரங்கொண்டலைக்குமதனைக்கண்ணாலெரித்தானசர
சரங்கொண்டிருக்குமிப்பூதலமுண்டுதண்ணந்துளவச்
சரங்கொண்டலொத்தெழின்மேனியிற்பூண்டவன்றொழும்
சரங்கொண்டளிர்க்கொன்றையான்மருதூரனஞ்சற்குருவே. (௬௨)

சற்குருவாயெனதுட்புறமாயெங்குந்தானெனும்
சற்குருவாய்நின்றவேதமித்தன்மையைத்தான்கண்டனே
சற்குருவப்பதந்தந்தானமலன்றண்காமருதூர்
சற்குருவாமத்திலம்மையைவைத்தவன்றடனமே. (௬௩)

தனக்கடங்காநெஞ்சனென்றனைக்கொண்டுதருமன்செல்வி
தனக்கடங்காவனின்றண்மருதூரவசந்திரவ
தனக்கடங்கால்கும்பத்தும்பிக்கொம்பென்னசமைந்தவிரு
தனக்கடங்காம்பலஞ்செங்கனிவாய்மங்கைதன்பங்கனே. (௬௪)

பங்கமுகந்தலைமோதக்கயலினம்பாய்ந்துபைங்கட்
பங்கமுகந்தலைசேர்மருதூரபருப்பதத்தாள்
பங்கமுகந்தலைதேய்த்திடவெண்டிங்கட்பட்டபெரும்
பங்கமுகந்ததலைவநின்பாதம்பரமெனக்கே. (௬௫)

பரவாதிருக்கைமருவாசமங்கைப்பழித்துப்பல்லவிம்
பரவாதிருக்கைதிருவுளமோவலைபண்டெடுத்த
பாவாதிருக்கைமழநாததேவர்பணிமருதூர்ப்
பரவாதிருக்கையறுத்தென்னையாளும்பதந்தரவே. (௬௬)

பதங்கடந்தானிரைத்தன்னபன்மாதர்கட்பற்றறநற்
பதங்கடந்தாலென்னகைம்மாறுசெய்வன்பகைத்தபருப்
பதங்கடந்தான்படக்கைம்மாவுரித்தபரமன்மறைப்
பதங்கடந்தான்புகழ்மாமருதூர்மங்கைபங்கினனே. (சுஎ)

கயவாவியன்னையாற்களித்தபரமன்மன்றற்
ங்கயவாவிமருதூரிலோரிறைபாரவல்லி
ங்கயவாவியிவன்மேலிமெப்பகைப்டுமின்
ங்கயவாவிமணமுமினிதலேப்பாவையயரே. (சுஅ)

துறை- மணம்விலக்கு.

ரவகனஞ்சக்கரந்துணித்தாய்பதமாறிட்ட
ாவகனஞ்சக்கறைமிடற்றுய்மருதூர்ப்பரம
ாவகனஞ்சத்திகுன்றின்றுளைப்பரந்தமலப்
பாவகனஞ்சற்பனேபிரிந்தென்றுபணிவதுவே. (சுக)

பணியாதவர்க்கத்தோடர்ச்சிக்கும்பத்திரபத்தர்சித்தம்
பணியாதவர்க்கருள்செய்மருதூரன்படவரவப்
பணியாதவற்குன்றவென்றவன்றுட்செம்பதுமநெஞ்சே
பணியாதவர்க்குமதிக்குமப்பாலேப்பதந்தரவே. (எ0)

வேலேக்கயலேக்கவர்விழியார்வசம்வீழ்ந்துனது
வேலேக்கயலேக்கண்டுமுயலேன்புக்கவேளேயுண்டேல்
வேலேக்கயலேக்கவருங்கொல்கூற்றைவெறுத்துயிர்போம்
வேலேக்கயலேப்புனன்மருதூர்முக்கண்மெய்ப்பயனே. (எக)

பயநந்தருகமலரிற்றுயிலப்படுமருதூர்ப்
பயநந்தருகப்பகலேக்கண்டோன்பத்தர்சித்தத்துள்ளான்
பயநந்தருமணிவோன்கழலீனும்பல்பிறவிப்
பயநந்தருந்துதிக்கவணங்கப்பரிந்திருமே. (எஉ)

இரும்பலவின்செய்மருதூரொன்னார்தமிதயங்கள்போல்
இரும்பலவின்னலதுதீரவேண்டிவ்வுலகத்துள்ளார்
இரும்பலவின்பமிலேயாயினுமைந்தெழுத்தையுன்னி
இரும்பலவின்சொலிடும்புகழ்ந்தேத்தியிரந்துகொண்டே. (எ௩)

இரவிதனந்தும்பரவையைச்சுந்தார்க்கெய்தச்சென்றேன்
இரவிதனஞ்செயன்றிங்களங்கண்ணனெழிற்கரும்ப
இரவிதனம்புணருமருதூரனிணையடியே
இரவிதனங்களறுத்துயிர்வாழுகைக்கென்னெஞ்சமே. (௭௪)

என்றுவருந்தக்கழுநீர்க்கிடங்கெங்குமீன்கறவை
என்றுவருந்துமலர்மருதூரிறையீசனை
என்றுவருந்தமிழாற்றுதிப்பேன்பயனெய்துவதிங்
கென்றுவருந்தகைமைக்கியல்பாயினவொன்னிடத்தே. (௭௫

இடத்தேயுமையைவைத்தோன்மருதூருறையெந்தைவின்ம
இடத்தேயுமைவண்ணனையுதைத்தோன்வெற்பிலிங்ஙனெங்க
ளிடத்தேயுமைவரப்பெற்றதுநன்றியின்றேந்தியமுத்
திடத்தேயுமையவிடையதிபாரவிளமுலைக்கே. (௭௬

துறை-கையுறைமறுத்தல்.

முலையம்புலவிறைபங்கர்கங்காளர்முதன்மருதூர்
முலையம்புலகங்கொளினுங்குன்றுமன்றன்மொய்குழலின்
முலையம்புலவிகெடத்தழுவேமதன்மூன்றம்பெய்தான்
முலையம்புலவியினியாவிநீலமுடித்திடுமே. (௭௭)

தலைவியுடன்-தலைவன்வருத்தங்கூறல்.

முடியப்படுவலைவிசும்பாமுப்புரவரவ
முடியப்படுகணைதொட்டவனேமருதூரமுன்னேய்
முடியப்படுபுலித்தோலனாமேவுமுதல்வவென்னை
முடியப்படுபிறவிக்கடல்விழமுனிந்தனையே. (௭௮)

முனியாயமானிடற்காயந்தகனைமுனிந்தவனே
முனியாயமானதமிழ்மருதூருறைமுக்கணநின்
முனியாயமாயவினைன்றேத்துகைக்கன்புமுற்றுவித்து
முனியாயமானிலத்தில்வினைதீரமுனிந்தனையே. (௭௯)

[illegible]யகல்வித்தெனையாண்டிடவேண்டும்விரைமலர்க்கா
[illegible]யகல்வித்தகக்கன்னியங்காடமெய்ப்பயில

வினையகல்வித்தனமாதர்க்குமோகம்விளைத்தருள்க
வினையகல்வித்தனவாமருதூர்மைம்மிடற்றவனே (௮௰)

அவனியம்பாரழல்கால்விசும்பாயெங்குமானவனே
அவனியம்பான்முப்புரமெரித்தாய்வதன்னணிமருதூ
ரவனியம்பாவித்தெனைவரவென்றடர்த்தந்தகனும்
அவனியம்பாமுன்னருள்புரிவாயுன்னடைக்கலமே. (௮௧)

கலங்காமனந்துகூற்றுவன்றோன்றிடுங்காலத்தடைக்
கலங்காமனந்தருமருதூராயகஞ்சத்தன்ப
கலங்காமனந்தமுராரிதொழுஞ்சிவகாமமென்னுங்
கலங்காமனந்தவிழித்தவனேகறைக்கந்தரனே (௮௨)

கந்தரவையனயன்மாலென்றிந்துகணபதிவேற்
கந்தரவையன்புகழ்மருதூரகரியதிருக்
கந்தரவையம்புகுந்தவனேமதன்காபங்கன
கந்தரவையம்பெய்தாலுய்யுமோவென்றன்காதலியே. (௮௩)

பாங்கிகூறல்.

காதலையாநின்னடியேவணங்கக்கருதுகின்ற
காதலையானினந்தீர்க்கிலன்காணினிகாலனென்மேற்
காதலையாநின்புறந்தோற்றிமாற்றிக்கனையரம்பைக்
காதலையாநிற்குந்தென்மருதூரவென்கண்மணியே. (௮௪)

கண்டிரவந்தங்குகாட்டிருவிருங்கதிர்மறைவுங்
கண்டிரவந்தனிற்போவதெங்கேதங்கிக்காலையிற்போங்
கண்டிரவந்தமொழிபங்கனேதென்னங்காமருதூர்க்
கண்டிரவந்தனைசெய்தூர்புகுமின்கவலையற்றே. (௮௫)

விருந்துவிலக்கல்.

பரிக்குங்கடற்றுறைவாகறைவாளரவ
குமம்புயத்திற்கொண்டாய்மருதூரரசே
தமிசையேபசையமதுரைவந்தாய்
தவில்வாங்கிலுண்டோவென்மசட்குயிரே. (௮௬)

இரவிதணந்தும்பரவைவையச்சூந்தார்க்கெய்தச்சென்றேன்
இரவிதனஞ்செயன்றிங்களங்கண்ணனெழிற்கரும்ப
இரவிதனம்புணருமருதூரனிணையடியே
இரவிதனங்களறுத்துயிர்வாழுகைக்கென்னெஞ்சமே. (எ௪)

என்றுவருந்தக்கழுநீர்க்கிடங்கெங்குமீன்கறவை
என்றுவருந்துமலர்மருதூரிறையீசனம
என்றுவருந்தமிழாற்றுதிப்பேன்பயனெய்துவதிங்
கென்றுவருந்தகைமைக்கியல்பாயினனொன்னிடத்தே. (எ௫

இடத்தேயுமையைவைத்தோன்மருதூருறையெந்தைவின்ம
இடத்தேயுமைவண்ணனையுதைத்தோன்வெற்பிலிங்ஙனெங்க
ளிடத்தேயுமைவரப்பெற்றதுநன்றியின்றேந்தியமுத்
திடத்தேயுமையவிடையதிபாரவிளமுலைக்கே. (எ௬

துறை-கையுறைமறுத்தல்.

முலையம்புலவிறைபங்கர்கங்காளர்முதன்மருதூர்
முலையம்புலகங்கொளினுங்குன்றுமன்றன்மொய்குழலின்
முலையம்புலவிகெடத்தழுவேமதன்மூன்றம்பெய்தான்
முலையம்புலவியினியாவிநிலைமுடித்திடுமே. (எ௭)

தலைவியுடன்-தலைவன்வருத்தங்கூறல்.

முடியப்படுவலைவீசும்பரமுப்புரவரவ
முடியப்படிகணைதொட்டவனேமருதூரமுன்னேய்
முடியப்படிபுலித்தோலனாமேவுமுதல்வவென்னை
முடியப்படுபிறவிக்கடல்வீழமுனிந்தனையே. (எ௮)

முனியாயமானிடற்காயந்தகனைமுனிந்தவனே
முனியாயமானதமிழ்மருதூருறைமுக்கணநின்
முனியாயமாயமின்னென்றேத்துகைக்கன்புமுற்றுவித்து
முனியாயமானிலத்தில்வினைதீரமுனிந்தனையே. (எ௯)

வினையகல்வித்தெனையாண்டிடவேண்டும்விரைமலர்க்கா
வினையகல்வித்தகக்கன்னிபங்காகடமெய்ப்பயில

வினையகல்வித்தனமாதர்க்குமோகம்விளைத்தருள்க
வினையகல்வித்தனவாமருதூர்மைய்ம்மிடற்றவனே (௮௰)

அவனியம்பாரழல்கால்விசும்பாயெங்குமானவனே
அவனியம்பான்முப்புரமெரித்தாய்வதன்ணணிமருதூ
ரவனியம்பாவித்தெனைவரவென்றடர்த்தந்தகனும்
அவனியம்பாமுன்னருள்புரிவாயுன்னடைக்கலமே. (௮௧)

கலங்காமனந்தந்துகூற்றுவன்றேன்றிடுங்காலத்தடைக்
கலங்காமனந்தருமருதூரையகஞ்சத்தன்ப
கலங்காமனந்தமுராரிதொழுஞ்சிவகாமமென்னுங்
கலங்காமனந்தவிழித்தவனேகறைக்கந்தரனே (௮௨)

கந்தரவையனயன்மாலென்றிந்துகணபதிவேற்
கந்தரவையன்புகழ்மருதூரகரியதிருக்
கந்தரவையம்புகுந்தவனேமதன்காபங்கன
கந்தரவையம்பெய்தாலுய்யுமோவென்றன்காதலியே. (௮௩)

பாங்கிகூறல்.

காதலையாநின்னடியேவணங்கக்கருதுகின்ற
காதலையானினந்தீர்க்கிலன்காணினிகாலனென்மேற்
காதலையாநின்புறந்தோற்றிமாற்றிக்கனைபரம்பைக்
காதலையாநிற்குந்தென்மருதூரவென்கண்மணியே. (௮௪)

கண்டீரவந்தங்குகாட்டிருவிருங்கதிர்மறைவுங்
கண்டீரவந்தனிற்போவதெங்கேதங்கிக்காலையிற்போங்
கண்டீரவந்தமொழிபங்கனேதென்னங்காமருதூர்க்
கண்டீரவந்தனைசெய்தூர்புகுமின்கவலையற்றே. (௮௫)

விருந்துவிலக்கல்.

பரிக்குங்கடற்றுறைவாகறைவாளரவ
கும்புயத்திற்கொண்டாய்மருதூரரசே
துமிசையேபசையமதுரைவந்தாய்
தவில்வாங்கிலுண்டோவென்மகட்குயிரே. (௮௬)

தாய்க்கூற்று.

முகவானரம்பையர்சந்திரர்சூரியர்மாமுனிவர்
மகவானரம்புவிபோற்றுங்கவுரிமருவியவா
மகவானரம்புயன்மாயனெருங்கமருங்கிற்கொண்ட
மகவானரம்பையங்காமருதூர்க்கொன்றைமாலையனே. (௮௭)

மாலையம்போருகக்கண்ணனையங்கிமதியங்கொன்றை
மாலையம்போருகந்தோறுந்தரித்துமன்ருடியைப்புன்
மாலையம்போருகந்தன்னுளிரணியன்மார்பகழ்ந்த
மாலையம்போருகக்கைம்மருதூரனைவந்திப்பனே. (௮௮)

வந்திக்குமாதரப்பத்தர்சித்தத்தன்மனமகிழ்ந்து
வந்திக்குமாதரமராவதிதொழுமன்னனெல்லு
வந்திக்குமாதரக்கன்றருந்துமருதூரனமன்
வந்திக்குமாதரப்போதணுகாதென்னுள்வைகுவதே. (௮௯)

வையம்புரந்தரமாலங்கிவின்மலைமாசுணநாண்
வையம்புரந்தரவானவர்பாசயன்மாமறையின்
வையம்புரந்தரமாறப்படைத்தனர்மாமதுரை
வையம்புரந்தரசாண்மருதூரர்தம்வல்லபமே. (௯௰)

வல்லியமாமனதளுடையான்மருதூரன்வள்ளி
வல்லியமாமன்முருகன்பிதாமும்மலங்களெனும்
வல்லியமாமனெகிழ்த்தென்னையாளுமென்மாட்டினினி
வல்லியமாமனத்துண்ணினையாய்கொல்வரத்தினையே. (௯௧)

வரப்புடைக்குஞ்சிச்சடையான்குவளைமதுவொழுகி
வரப்புடைக்குஞ்சிறுமாமருதூர்வெற்பின்மங்கைதன்பால்
வரப்புடைக்குஞ்சிங்கங்குலில்வாரல்வந்தாலெழிலி
வரப்புடைக்குங்கொங்கையாதலின்வேண்டும்வரவினியே.

பாங்கிவரைவுமுடுக்கம்.

இனியமனச்சுதலில்லையென்மென்மன்றலின்கமலத்
தினியமனச்சுதன்போற்றும்பிரான்மருதூரிறையாம்